அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025
# தமிழ் - ஆண்டு 3

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

பிறருக்குத் தேவையானவற்றைப் பயன் கருதாது கொடுப்பது கொடை. உணவு மாந்தரின் தேவைகளுள் முதன்மையானது. பசித்தோருக்கு உணவு கொடுப்பதே சிறந்த கொடை ஆகும். எம்மிடம் இருக்கும் பொருளைப் பலரோடும் பகிர்வது உயர்ந்த பண்பு. பொருள்களைக் களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுபோல, நாம் பசித்தோருக்கு உணவளித்து நல்லறங்களைச் செய்வோம்.